6 பாடம்

# தேவனுக்கு ஒரு வீடு

***உன்னிடம் உள்ள மிகவும் மதிப்பான, உனக்குப் பிரியமான ஒன்று எது? அதை மற்றவருக்கும் பகிர்ந்துகொடுக்க நீ சம்மதிப்பாயா? உன் போதகர் அதைத் தேவனுக்குக் காணிக்கையாகக் கேட்டால், உனக்கு எப்படியிருக்கும்?***

இஸ்ரவேலர் தேவனுடைய வழிநடத்துதலை தினமும் உணர்ந்தார்கள். பகலிலே அவர்களுடனேயே வந்த மேகஸ்தம்பமானது தேவன் அவர்களுடனேயே இருக்கிறார் என்பதை நினைவூட்டியது. இரவில் வெதுவெதுப்பாக அவர்களைக் காத்தது அக்கினி ஸ்தம்பம். ஆனாலும் அவர்களுக்கு அது போதுமானதாக இல்லை. தேவனைச் சந்திக்கச் சிறப்பான இடம் ஒன்றை விரும்பினார்கள். தேவனும் அவர்களைத் தினமும் சந்திக்க விரும்பினார்.

தேவன் தங்களுடனேயே எப்போதும் இருப்பதை, இஸ்ரவேலர் உணர்ந்துகொள்ள தேவன் ஆசைப்பட்டார். அங்கே வந்து தம்மைத் தொழுது கொள்ளவும் விரும்பினார். இஸ்ரவேலரது கூடாரங்களுக்கு மத்தியிலேயே தாமும் வாசம்செய்ய விரும்பினார்.

எனவே, தேவன் தமது வீடு எப்படியிருக்க வேண்டும் என்று மோசேக்கு விளக்கமாய் சொன்னார். வீட்டுக்கான ஒரு வரைபடத்தையும் மோசேயிடம் கொடுத்தார். மோசேயும் தேவன் சொல்லியவற்றை சரியாக விளங்கிக்கொண்டார்.

மேலும் தேவன் மோசேயிடம், “என் வீட்டைக் கட்டும் வேலையை இஸ்ரவேலரும் சேர்ந்து செய்யவேண்டும்; அவர்களுக்கும் அதில் பங்கு உண்டு என்று சொல்; என் வீடு கட்டப்படுவதற்கு அவர்கள் தங்களால் இயன்றவற்றை காணிக்கையாகக் கொண்டு வரவேண்டும். எரிச்சலோடு யாரும் கொண்டுவர



**மனன வசனம்**

**அவர்கள் நடுவிலே நான் வாசம்பண்ண, எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக.**
**யாத்திராகமம் 25:8.**

வேண்டாம். மனவிருப்பத்தோடே கொண்டுவந்தால் மட்டும் போதும்; 'என்ன காணிக்கைக் கொண்டுவரவேண்டும்' என அவர்கள் கேட்டால், நான் இப்போது சொல்வதை மட்டும் கொண்டுவரச்சொல்.

கேரூபின், உடன்படிக்கைப் பெட்டி, பலிபீடம், குத்துவிளக்கு போன்றவற்றைச் செய்ய வேண்டியுள்ளது. எனவே பொன், வெள்ளி, வெண்கலம் போன்றவற்றை மக்கள் கொண்டுவரலாம். சீத்திம் மரம் தரமானது. எனவே வெயிலிலும், குளிரிலும் நல்ல முறையில் உழைக்கத் தகுந்த விதத்தில் சீத்திம் மரத்தினாலேயே வேலைகள் செய்யப்படவேண்டும். எனவே, சிலர் சீத்திம் மரத்தைக் கொண்டுவரட்டும்.

என் வீடு எப்போதும் வண்ணமயமாக இருக்கவேண்டும். எனவே, இளநீலநூலும் இரத்தாம்பர நூலும் சிவப்பு நூலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலுமாகிய இவற்றால் சித்திரத் தையல் வேலையான தொங்கு திரையை உண்டாக்கு. என் வீட்டின் சுவர்ப்புறத்தை இத்தகைய அழகிய வண்ணத்திரைகளால் மேலும் அழகாக்கு. தோல்களும் தேவைப்படும். எனவே, சிகப்புத் தீர்ந்த ஆட்டுக்கடாத் தோல், தகசுத்தோல் முதலானவைகளும் கொண்டுவரப்படவேண்டும்.

என்னுடைய வீடு எப்போது ஒளிமயமாகத் திகழ விளக்குக்குத் தேவையான ஒலிவ எண்ணெய், விளக்கெண்ணை கொண்டுவரட்டும். மேலும், அபிஷேக தைலத்துக்குப் பரிமளவர்க்கங்களும் தூபத்துக்குச் சுகந்தவர்க்கங்களும் ஏபோத்திலும் மார்ப்பதக்கத்திலும் பதிக்கும் கோமேதகக்கற்களையும் இரத்தினங்



## செய்தி

**தேவனுக்கு நான் காணிக்கை கொடுக்கும்போது தேவனைத் தொழுகிறேன்.**

களையும் மக்கள் கொண்டு வரட்டும்'' என்றார்.

இஸ்ரவேலர் மிகுந்த மகிழ்ச்சியோடே எகிப்தியர் களிடமிருந்து தாங்கள் பெற்ற பொன், வெள்ளி போன்ற விலையுயர்ந்த ஆபரணங்களை மோசேயிடம் காணிக்கையாகக் கொண்டு வந்தார்கள்.

இஸ்ரவேலர் மனமுவந்து கொண்டு வந்த விலையேறப் பெற்ற அழகிய பொருள்களால் தேவனுடைய வீடு மிகவும் அருமையாக அமைந்தது. தேவனுடைய வீடு அப்போது ஆசரிப்புக்கூடாரம் என்றழைக் கப்பட்டது.

என் அன்பே! நீயும் தேவனுக்கு உண்மையான அன்போடும் விருப்பத்தோடும் உனது காணிக்கையைக் கொடு. உன்னைக் கொடுப்பாயா?

**செய்முறை: தேவன் இஸ்ரவேலரின் மத்தியில் வாசம்பண்ண விரும்பினார். அங்கே தமக்கு ஒரு வீட்டைக் கட்டச்சொன்னார். அப்போது தேவனின் வீட்டைக் கட்டுவதற்கான காணிக்கைப் பொருட்களை எவ்விதம் கொடுக்கவேண்டுமெனச் சொன்னார். விடையைக் கண்டறிய பாடத்தை நன்கு படி. பின்னர், எழுத்துகளையும் குறியீடுகளையும் சரியே பொருத்தி விடையைக் கோட்டில் எழுது.**

### புதிர் 6

| ___ | ___ | ___ | ___ | ___ | ___ | ___ | ___ | ___ | ___ |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ▞ | ▲ | ⏮ | ▼ | ⏩ | ⏭ | ■ | ⏪ | ⏸ | ● |

| ன | ரு | து | ப் | வி | ப | ட | த் | ன் | ம |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ▲ | ▼ | ⏪ | ⏩ | ⏮ | ⏭ | ⏸ | ■ | ● | ▞ |